அறிவொளி

அறிமுக விருந்து

தமிழில் ஐந்தாண்டு காலமாக இலங்கையிலிருந்து
வெளிவரும் விஞ்ஞானத் திங்களிதழ்

★

உலகின் பல பாகங்களிலிருந்தும் தமிழகம் வந்துள்ள தமிழறிஞர்களுக்கு 'அறிவொளி' சஞ்சிகை பற்றிய சில சுருக்கமான தகவல்கள்

★

வெளியிடுவோர் :

தமிழில் விஞ்ஞானக்கல்வி விருத்திக்கான நிறுவகம்

35/9, யோசேப்பு ஒழுங்கை, பம்பலப்பிட்டி, இலங்கை.

யாழ்ப்பாணத்தில் விஞ்ஞானத் தமிழ் 1875-இல்
சமுல். பி. கிறீன் வைத்தியன்

எழுதிய 'கெமிஸ்தம்' என்ற இரசாயன நூலின் மதிப்புரையிலிருந்து……

இல்லாத சாஸ்திரமென்ற மப்பில் பதுங்கி தமிழருக்கு நாச மோசத்தை வருவிக்கும் சகுனம், சூனியம் முதலிய பொய்கள் தடையின்றி நித்தமும் உலாவுகின்றன.

இரசவாதத்துக்குப் பதிலாக பொருள்களின் கூறுகளைக் குறிக்கும் கெமெஸ்தமென்ற வித்தையும், சோதிட சாஸ்திரத்துக்குப் பதிலாக நட்சத்திரங்களின் தன்மைகளைச் சரியாய்ச் சொல்லும் வான சாஸ்திரத்தையும், இல்லாத ராட்சதர் தேவதைகளைப் பற்றிய கதைகளுக்குப் பதிலாக உள்ள சரித்திரங்களையும், சுருக்கிச் சொல்லுகில் பொய்யான கல்விக்குப் பதிலாக மெய்யான அறிவை தேசத்தில் நிறுத்துவது, ஊரிலும் ஆளிலும் உள்ள துரெண்ணம் பழக்கங்களை அகற்றுமென்று நம்பி விரும்புகிறபடியால் இப் புஸ்தகம் பிரசுரமாகிறது.

உதவியவர் : வைத்தியத்துறைப் பேராசிரியர்
அ. சின்னத்தம்பி அவர்கள்

இன்றைய ஈழத்தில்…

★ *1967-ம் ஆண்டுக்குப்பின் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பை தமிழிலேயே கற்கிறார்கள்.*

★ *சிறப்புப் பட்டப் படிப்புக்கான பாடப்புத்தகங்களை ஆக்கி வெளியிடுவதில் இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளனர்.*

அன்னை மொழி

இ. சிவானந்தன்

ஆங்கிலத்தோ டமுதபடி அறிவினையும் அடகுவைத்து
ஓதுவார் முறையிற்செல்லும் ஒருவழிப் பாதைவிட்டு
விஞ்ஞான நோக்கொன்றை வில்லங்கம் ஏதுமின்றி
எஞ்ஞான்றும் எவரிடத்தும் எளிதிலே செறியச்செய்ய
ஆற்றல் மிகுந்ததுதான் அன்னைமொழி அதன் பின்பாக
நாட்டினிற் தேவைவந்து நல்லபி விருத்தித் திட்டம்
தீட்டுதல் வேண்டும்அன்று தேவையும் வந்துசேர(ஆ)
ராய்ச்சிகள் பிறக்குமப்போ திறமையும் சிறப்பதுண்மை.

தமிழிலே புத்தகங்கள்! தாய்மொழி தெரிந்தாற் போதும்,
வீட்டிலே வேலையின்றி விருந்தையிற் தூங்கும் தாய்தன்
பாட்டிலே கிடக்கும் நூலைப் படித்திடல் கூடுமப்போ
ஏட்டிலே 'இங்கிலீசில்' இதுவரை இருந்த சேதி
வீட்டிலே பரவல் கூடும் விளைந்திடும் நன்மையின்று,
நாட்டிலே அறிவுப்பஞ்சம் அகன்றிட வழிகளுண்டு
என்பதை உணர்ந்துநாமும் ''அறிவொளி'' பரப்புவோமேல்
சிந்தனை சிறக்கும்வாழ்வு வளமுறும் நாடும் உய்யும்.

தமிழ்மொழியில் உயர்தர விஞ்ஞானக்கல்வி பற்றி
இலங்கைப் பல்கலைக்கழகப் பௌதிகப் பேராசிரியர்

ஆ. வி. மயில்வாகனம்

அவர்கள்

அறிவொளிக்களித்த சிறப்புப் பேட்டி

[உயர் விஞ்ஞானத்தைத் தாய்மொழி மூலம் பயிற்ற முடியுமா? அவ்வாறு பயிற்றுவது நாட்டுக்கு நன்மை பயக்குமா? இவைபோன்ற கேள்விகளுக்கு ஆழ்ந்த அறிவையும் நீண்ட அனுபவத்தையும் ஆதாரமாகக்கொண்டு ஆணித்தரமாகப் பதிலளிக்கக் கூடியவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் பேராசிரியர் ஆ. வி. மயில்வானமும் ஒருவர் என்பதில் ஐயமில்லை. இம்மாநட்டின் சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவராகத் திகழும் அன்னூர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில், பௌதிகத் துறைத் தலைவராகக் கடமையாற்றுகிறார். தேசிய மொழிகளில் (தமிழ், சிங்களம்) உயர்தரக் கல்வி பற்றி ஆய்வு செய்ய 1953-ம் ஆண்டு இலங்கை அரசினர் நியமித்த அதிகார சபையிலும் அவர் அங்கம் வகித்தமை குறிப்பிடத்தக்கது அன்னூர் 'அறிவொளி' நிருபருக்கு அளிந்த விசேட பேட்டியை அகில உலகத் தமிழ் மக்களுக்கு அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆ-ர்]

கேள்வி : *அரசாங்கம் தாய்மொழியில் விஞ்ஞானக் கல்வியைப் படிப்படியாகப் புகட்டத் தொடங்கி இவ்வாண்டு பொதுக்கல்வித் தராதர உயர்நிலை G. C. E. (Advanced level) வகுப்பிலும் தாய்மொழி போதனு மொழியாகிவிட்டது. இந்நிலையில் இக்கொள்கையை மறுபடியும் புனராலோசனை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா?*

பதில் : *இல்லை.* தாய்மொழிகள் போதனு மொழிகளாக்கப்பட்டதால் இதுவரையில் ஏதாவது தீங்கு விளைந்

திருந்தால் மட்டுமே புனராலோசனை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆனால், மாறாக நன்மையே ஏற்பட்டிருப்பதால் புனராலோசனை பற்றிச் சிந்திப்பதற்கே இடமில்லை.

கேள்வி: இன்று சில வட்டாரங்களிலிருந்து ஆங்கிலத்தையும் ஒரு போதனா மொழியாக்கல் வேண்டும் என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. சில ஆங்கிலப் பத்திரிகைகள் நேரடியாகவும் ஏனையவை மறைமுகமாகவும் இதற்கு ஆதரவு திரட்டுகின்றன போல் தெரிகின்றதே; உங்கள் அபிப்பிராயப்படி, இதன் காரணங்கள் யாவை?

பதில்: வெள்ளையரின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலமே அரசாங்க மொழியாக இருந்தது. அந்நேரத்தில் ஆங்கில மொழியறிவு பெற்றுவிட்டால் அரசாங்கத்தில் உயர்பேறும் பட்டம் பதவிகளும், மற்றும் சாதாரண மக்களுக்குக் கிடைக்காத பல சலுகைகளும் அவர்களைக் காத்திருந்தன. இந்தக் குறுக்கு வழியைப் பயன்படுத்த எண்ணிய சிலர் தமது தேசியப் பண்பாடுகளைக் கை நழுவவிட்டு ஆங்கிலத்தையே வீட்டு மொழியாகக் கொள்ளத் தலைப்பட்டனர். இன்றோ அந்நியராட்சி மறைந்துவிட்டது. ஆனால் ஆங்கில மொழியைப் பற்றிப் பிடித்துக்கொண்ட சிலர் இன்னும் தமது அழுங்குப் பிடியைத் தளர்த்தவில்லை. இதனால் இன்னும் தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தையே வீட்டு மொழியாகப் பழக்கி வருகிறார்கள். ஆகவே தேசிய மொழிகள் மட்டுமே போதனா மொழிகளாக மாறியது இவர்களுக்குப் பெரும் இடையூறானதில் எதுவித வியப்புமில்லை. ஆனால் இவர்கள், தாம் முன்பு அனுபவித்த சலுகைகளைத் தொடர்ந்து பெறுவதற்காக ஆங்கிலமொழி மூலப் போதனையே வேண்டுமென்று ஒற்றைக்காலில் நிற்கிறார்கள். சுயநலத்தை வெளிக்காட்டாது மறைத்து ஆங்கிலத்துக்கு வக்காலத்து வாங்கும் வகையில் முதலைக்

கண்ணீர் விடும் இதே பேர்வழிகள் சந்தர்ப்பம் வாய்த்தால், "ஆங்கிலத்தையே பழையபடி அரசாங்க மொழியாக்க வேண்டும்'' என்று கூப்பாடு போடவும் தயங்கமாட்டார்கள். தாய்மொழியைப் பயின்றுகொள்ள ஆற்றல் இல்லாத இவர்களால் விஞ்ஞானமும் வளரப்போவதில்லை, நாட்டுக்கும் ஒரு பயனில்லை. ஏனைய மக்களிடையேயாவது விஞ்ஞானம் வளர்வதைத் தடை செய்யாமலிருப்பதே இவர்கள் செய்யக் கூடிய நல்ல காரியம்.

கேள்வி: தாங்கள் இப்போது குறிப்பிட்ட சுயநலமிகள், தேசப்பற்றற்றோர், அன்னிய கலாச்சார அடிமைகள் ஒருபுறமிருக்க, நாட்டு நலனிலும் நமது சமுதாய மேம்பாட்டிலும் உண்மையான நாட்டமுள்ள பொதுமக்களிற் சிலருக்கும் இக்கொள்கைபற்றி இன்னும் ஐயப்பாடுகள் இருப்பதுபோல் தெரிகிறது. இவர்களை முன்னிட்டுச் சில ஐயங்களைத் தாங்கள் நீக்க வேண்டியுள்ளது.

(அ) முதலில் விஞ்ஞானமும் பொறிநுட்பமும் துரித கதியில் வளர்ச்சியுறும் இந்நூற்றாண்டில் இக்கொள்கையினால் நாம் பின்தங்க நேரிடுமா? அல்லது இக்கொள்கை உண்மையில் நாமும் வளர்ச்சியடைய வழிகோலுமா?

பதில்: தாய்மொழிகளில் விஞ்ஞானத்தைப் போதித்தால் நாம் பின்னடைய நேரிடும் எனச் சிலர் இங்கே வெருட்டுகிறார்கள். இங்கிலாந்திலும் கியூற்றனுக்குச் சற்றுப் பிந்திய காலத்தில் இலத்தின் மொழியே போதனாமொழியாயிருந்தது. இலத்தின் அகற்றப்பட்டு அதனிடத்தில் ஆங்கிலம் போதனாமொழி ஆக்கப்பட்டபொழுதும் உயர் வர்க்கத்தினர் கடுமையாக எதிர்த்தார்கள். நாடு பின்னடைந்துவிடுமென வெருட்டினார்கள். ஆனால் அந்நாட்டு மக்களின் தாய்மொழியான ஆங்கிலம் போதனாமொழியான பின்னர்தான் உயர் பௌதிகமும் பிற விஞ்ஞானத் துறைகளும் அங்கே நன்கு வளர்ச்சி பெற்றன. இவ்வாறு

போலந்து, செக்கோசிலோவேகியா, இஸ்ரேல் போன்ற பிறநாடுகள் சிலவற்றையும் உதாரணமாகக் காட்டலாம். எனவே இக்கொள்கையால் நாம் பின்னடைய நேரிடுமோ என அஞ்சுவதற்கில்லை. மாறாக இக்கொள்கை நாம் வளர் வதற்கு வழிகோலும். எப்படியென்றால், விஞ்ஞானத்தைப் பொதுமக்களிடையே எடுத்துச் சென்றாலன்றி வளர்ச்சி ஏற்படாது. நடைமுறையில் விஞ்ஞானத்தைப் பிர யோகித்து வளர்க்கக்கூடியவர்கள் சாதாரண பொது மக்களே. ஆகவே அவர்களின் மொழியில் விஞ்ஞானத்தைப் போதித்தாற்றான் அவர்கள் விஞ்ஞானத்தை உரிய முறையில் பிரயோகிக்க முடியும். நாடும் முன்னேற முடியும். அப்போதுதான் விஞ்ஞானத்தால் ஏற்படக் கூடிய பூரண பலனையும் நாம் அனுபவிக்க முடியும்.

கேள்வி: (ஆ) 'நாட்டு மக்களிடையே விஞ்ஞானத்தைப் பரப்புவது' என்று கூறினீர்களே; அதைப் பற்றிச் சற்று விரிவாகக் கூறுவீர்களா?

பதில்: தோட்டத்தில் உரமிட்டுப் பயிர்வளர்க்கும் விவசாயியும், தொழிற்சாலைகளில் யந்திரங்கள், பொறிக ளோடு நாளாந்தம் ஊடாடிப் பழகும் தொழிலாளர்களும் சாதாரண நாட்டுமக்களே. இவர்களே நடைமுறையில் விஞ்ஞானத்தை அன்றாடம் பயன்படுத்த வேண்டியவர்கள். இதற்கு அவர்களிடையே விஞ்ஞான அறிவு நன்கு பரவ வேண்டும். அதைப் பரப்புவதற்கு அவர்களின் சொந்த மொழியைவிட வேறு எந்த மொழிக்குத் தகுதி உண்டு? தனிப்பட்ட ஒரு சிலருள் அடங்கிக் கிடக்கும்வரை ஒரு போதும் விஞ்ஞானம் விருத்தியடையாது. சரித்திர அடிப் படையில் பார்த்தாலும் பல பொறிகளையும் நுட்ப அமைப்பு களையும் சாதாரண தொழிலாளர்களே கண்டுபிடித்திருக் கிறார்கள். தாய்மொழியில் பயிலும்போது மொழித்தடை ஏற்படாது. கிரகிக்கும் தன்மையும் அதிகமாக இருக்கும்.

சுய சிந்தனைவிருத்திக்கும் போதிய சந்தர்ப்பமேற்படும். அதனால் விஞ்ஞானமும் மக்களிடையே சுவறும். அப்பேற்பட்ட ஒரு வளர்ச்சி உண்டானால் தான் புத்தம்புதிய ஆராய்ச்சிகளும் தோன்ற வழி பிறக்கும்.

கேள்வி: (இ) இதுகாறும் தாய்மொழியில் விஞ்ஞானத்தைப் பயிற்றியதால் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்துச் சாதகமான சான்றுகள் ஏதும் கிடைத்துள்ளனவா?

பதில்: இது காறும் நிகழ்த்தப்பட்ட பொதுத் தேர்வுகளில் விஞ்ஞான பாடங்களுக்குத் தாய்மொழி மூலம் எழுதப்பட்ட விடைத் தாள்களில் மாணவர்களின் கூடிய அறிவுத் தெளிவும சிறந்த கருத்து விளக்கமும் நன்கு தொனித்துள்ளன. அவர்கள் விடயங்களை நன்கு கிரகித்து எழுதுகிறார்கள் என்பதும், வெறுமனே மனனம் செய்து எழுதவில்லை என்பதும் நன்கு புலப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்ந்தும் தங்கள் உயர்தரக் கல்வியைத் தாய்மொழியில் பெற்று வரின் விஞ்ஞானத்தை வருங்காலத்தில் சுயமுயற்சியால் வளர்ப்பார்கள் என்ற நம்பிக்கை பாழாகாது.

கேள்வி: அப்படியானால் இவர்களிடமிருந்து நாம் விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் எதிர்பார்க்கலாமா?

பதில்: இன்று சிலர் ஆராய்ச்சி என்ற சொல்லை வைத்துக்கொண்டு பொதுமக்களுக்குப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். ஆராய்ச்சிக்கு அடிப்படை நாட்டின் தேவைகள். அபிவிருத்தியோடொட்டியே ஆராய்ச்சியின் வளர்ச்சி ஏற்படும். அதுபோல ஆராய்ச்சிகளும் அபிவிருத்திக்கு உறுதுணை யாகின்றன. ஆராய்ச்சி ஏற்படவில்லை என்றால் நாட்டில் போதிய அபிவிருத்தி ஏற்படவில்லை என்றுதான் அர்த்தம். மறுபுறம் ஆராய்ச்சி செய்பவர்களுக்குக் குறிப்பிட்ட ஒரு தகுதி இருக்கவேண்டும். அவர்கள் விஞ்ஞானத்தில் ஆழ்ந்த செறிந்த நுண்ணிய அறிவு பெற்றிருக்க வேண்

டும். அத்தகைய அறிவைப் பெறுவதற்கு மொழி ஒரு தடையாக அமையக் கூடாது. மொழி தடையாக இருந்த வரையில் அதிகம் பேர் ஆராய்ச்சியாளர்கள் ஆகும் தகுதியைப் பெறவில்லை என்பதில் ஆச்சரியம் என்ன? 'இங்கிலாந்துக்குச் சென்று கலாநிதிப் பட்டம் (Ph. D.) பெற்றுத் திரும்பியுள்ளவர்களின் நிலையென்ன?' என்று நீங்கள் கேட்கலாம். இவர்கள் ஒரு பேராசிரியரின்கீழ் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் [2 அல்லது 3 வருடங்கள்] ஏதாயினும் ஒரு துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறுவது உண்மை. ஆனால் அவர்கள் தாய் நாட்டுக்குத் திரும்பிய பின் தாம் பெற்ற தேர்ச்சியை எந்த அளவுக்கு இந்நாட்டுக்குத் தேவையான புதுப்புது ஆராய்ச்சிகளுக்குப் பயன் படுத்தினார்கள் என்பது கேள்விக்குரிய விடயமே! மேலும் அன்னிய மொழி போதனா மொழியாக இருக்கும்போது மாணாக்கரின் சக்தி, ஆற்றல் ஆகியவற்றின் பெரும் பகுதியானது அம்மொழியைக் கற்பதில் செலவாகின்றது.

கேள்வி: ஆராய்ச்சியாளர்கள் உருவாவதற்குத் தாய் மொழி மிகவும் உதவுமென்பது சரியேயானாலும் அவர்கள் பிறமொழியாளர்களின் ஆராய்ச்சிகளைப் படித்தறிய அம்மொழிகளை எந்த அளவிற்கு அறிந்திருக்க வேண்டும்?

பதில்: ஆராய்ச்சியாளர்களுக்கு மேலைநாட்டு மொழிகளொன்றில் பயிற்சி இருப்பது அவசியம்தான். உயர்தரக் கல்வி பயின்றுபின்பு ஆராய்ச்சிக்குச் செல்பவர்கள் சிறந்த தேர்ச்சிபெற்ற, வடிகட்டி எடுத்த ஒரு சிலராகவே இருப்பார்கள். அவர்களுக்கு ஆங்கிலத்திலோ அன்றி வளர்ச்சி பெற்ற பிற மேலைநாட்டு மொழி யொன்றிலோ பயிற்சி பெறுவது சிரமமாக இராது. உதாரணமாக நான் 1927-இல் கேம்பிரிட்சுக்குப் (Cambridge) போன காலத்தில் நவீன பௌதிகவியலுக்கென (Modern Physics) சில சஞ்சிகைகள் வெளிவந்தன. அவை யாவும் ஜெர்மன் மொழி

யிலேயே எழுதப்பட்டிருந்தன. அக்காலத்தில் அவ்விபரங்களடங்கிய ஆங்கில சஞ்சிகைகளோ நூல்களோ எதும் இருக்கவில்லை. நான் அகராதியின் உதவியோடு அச் சஞ்சிகைகளைப் படிக்கத் தொடங்கி வெகு விரைவில் அகராதியின் உதவி இன்றியே சுயமாகப் படித்து அறிந்துகொள்ள முடிந்தது. அதேபோல ஆங்கிலத்தை நன்கு பேச, எழுதத் தெரியாதவர்களும் ஆராய்ச்சிக்குத் தேவையான ஆங்கிலப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். இதைப் பகுத்தறிய மறுக்கும் சிலர், ஆராய்ச்சியாளர்களுக்கு ஆங்கிலம் தேவைப்படும் என்பதைச் சாட்டாக வைத்துக்கொண்டு அம்மொழியையே எல்லாருக்கும் கட்டாயப்படுத்திக் குட்டையைக் குழப்ப எத்தனிக்கிறார்கள். அவர்கள் விஞ்ஞானத்திற்கும் விரோதிகள், நாட்டு முன்னேற்றத்துக்கும் விரோதிகளே. இங்கு ஒரு மொழியைத் (ஆராய்ச்சிக்கென) துணைமொழியாகக் கொள்வதற்கும் அதே மொழியைப் போதனாமொழியாகக்கொள்வதற்குமுள்ள வேறுபாட்டை நாம் தெளிவாக அறிந்து கொள்ளல் வேண்டும்.

கேள்வி: ஈழத் தமிழ் மக்களிற் சிலர், கண்மூடித்தனமாக இந்தியாவை, குறிப்பாகத் தமிழ்நாட்டைப் பின்பற்றும் ஒரு கலாச்சார அடிமைப் போக்குடையவர்களாக இருக்கிறார்கள். "தமிழ்நாட்டுப் பெரியோர்கள் செய்யவில்லையே, எமது கல்விமான்கள் என்ன உசத்தியோ" எனக் கேட்கும் இவர்களுக்குத் தாங்கள் கூறுவது யாது?

பதில்: தமிழ்நாட்டார் சில நல்ல காரியங்களைச் செய்யாவிட்டால் நாமும் அதைச் செய்யாமல் இருக்கவேண்டுமென்பதில்லை. அவர்களை எல்லா விதத்திலும் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் ஓர் எண்ணம் நம் முன்னோரிடம் ஏற்கெனவே வேரூன்றியிருந்திருந்தால், நல்லை நகரில் ஒரு ஆறுமுக நாவலர் தோன்றித் தமிழ் வசன நடைக்கு வித்திட்

டிருக்க முடியுமா? திட்டமிட்டு அச்சகங்கள் தாபித்து அதன் மூலம் சைவம் வளர்த்திருக்க முடியுமா? எனவே தமிழில் விஞ்ஞானக் கல்வியைப் புகட்டும் விடயத்திலும், தமிழ் நாட்டு மக்களுக்கு நாம் வழிகாட்டியாயிருக்க வேண்டி நேரிடின் அதில் தவறென்றுமில்லையே. ஆகவே 'சரி' என்று நாம் கொள்பவற்றை நடைமுறையிலிடுவதற்கு நாம் ஒருபோதும் தயங்கக் கூடாது. அன்றியும் தெ. பொ. மீனுட்சிசுந்தரனர் போன்ற தமிழ்நாட்டுப் பெரியோர்கள் தமிழையே போதனு மொழியாக அமைத்தல் வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கின்றனர்கள். சென்னை வந்து என் கொள்கையைப் பரப்புமாறு மீனுட்சிசுந்தரனர் அவர்கள் எனக்கு அழைப்பும் விடுத்துள்ளார்.

கேள்வி: அப்படியானல், இக்கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் உள்ள முக்கிய பிரச்னையான பாடநூல், துணை நூல்களின் பற்றுக்குறையைத் தீர்க்கத் தாங்கள் கூறும் ஆலோசனை யாது?

பதில்: இன்று நமது அரசகரும மொழித் திணைக்களம் வெளியிட்டுப் பிரிவு நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. ஆயினும் சிலர் தாம்தாம் மொழிபெயர்க்கிறேமென்று புத்தகங்களை ஏற்றுக்கொண்டு மந்தமாக மொழி பெயர்க்கிறர்கள். அல்லது புத்தகங்களைத் தம்முடன் வைத்துக்கொண்டு பேசாமல் இருக்கிறர்கள். இப்புத்தகங்களை அவர்களிடமிருந்து வாங்கி ஆர்வமுடையவர்களுக்குக் கொடுக்கவேண்டும். விஞ்ஞான நூல்களை மொழி பெயர்ப்பதற்கு ஆர்வம், ஆங்கில அறிவு, நூலறிவு, தமிழறிவு, அனுபவம் ஆகியவை தேவை. கூட்டாக இவற்றைப் பயன்படுத்தி இம்மொழி பெயர்ப்பு வேலைகளையெல்லாம் இந்தத் தலைமுறையிலேயே செய்தாக வேண்டும். விஞ்ஞான நூல்களை மொழிபெயர்க்கக்கூடிய சிலர் வெவ்வேறு அரசாங்கத் திணைக்களங்களில் தொழில் புரிகின்றனர்கள். இவர்கள் மொழிபெயர்ப்பைத்

தமது ஓய்வு நேர வேலையாகக் கொள்வதாலேயே மொழி பெயர்ப்பு வேலைகளில் தாமதம் ஏற்படுகிறது. முடியு மானால், இவர்களைத் தற்காலிகமாக மொழி பெயர்ப்புக் கென முழுநேர ஊழியர்களாக்கினால் மொழி பெயர்ப்பு வேலைகள் துரிதமாக முடிவுறும். மொழி பெயர்ப்புகள் யாவும் இன்றே செய்தாக வேண்டும். இன்னும் சில காலத் தில் தாய்மொழி மூலம் பயில்வோர் தாமே சுயமாகப் புத்த கங்கள் எழுதத் தொடங்கு முன்னர் மொழி பெயர்ப்புகளை நாம் முடிக்கவேண்டும்.

கேள்வி: நீங்கள் இதுவரை கூறிய யாவையும் ஏற்றுக் கொள்ளத் தக்கனவே ஆயினும், தமிழர்கள் தம் மொழியில் விஞ்ஞானக் கல்வி கற்பதால், அவர்களுக்கு மட்டும் ஒரு புதிய பிரச்னை அவிழ்த்து விடப்படுவதாக ஒரு சில தமிழ் மக்கள் பீதியடைகின்றனர். அதாவது தமிழர்களுக்கு இலங்கையிலேயே வேலை வாய்ப்புக்கள் குறைவாயிருக்கு மிவ்வேளையில் உயர்தர விஞ்ஞானக் கல்வியையும் தமி ழில் பெற்றால், வெளிநாடுகளிலேனும் சென்று வேலைவாய்ப் புப் பெறமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை தோன்றுமே என் கிறார்கள். இதற்குத் தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?

பதில்: எமது கடந்த கால அனுபவங்களிலிருந்து, ஆங் கில மொழி மூலம் விஞ்ஞானத் தேர்ச்சி பெறக்கூடியவர் கள் வெகு சிலரே என்பது கண்கூடு. இந்த வெகு சிலருள் ளும் பெரும்பாலோருக்குக் குடும்பப் பொறுப்புக்களும், வேறு சமூகப் பிரச்னைகளுமிருப்பதால் நாட்டைவிட்டு வெளியேறக் கூடியவர்கள் அற்பத்தில் அற்பமே! அவ்வளவு தூரத்திற்கு ஏன் போகவேண்டும்; அன்று யாழ்ப்பாணத் திலிருந்து வேலை வாய்ப்புத் தேடி மலாயா சென்ற குடும்பங் கள்தான் எத்தனை? அதிலும் ஒரு சிறிய தொகையினருமே இன்று அங்கு செல்ல முடியாத நிலையில் இருக்கின்றனர். இதே கதிதான் இன்று கானா, நைஜீரியா போன்ற நாடு

களுக்குச் செல்பவர்களுக்கும் அண்மையில் ஏற்படும். எனவே, தமிழர்கள் வெளிநாட்டுக்குப் போவது, என்பதையே நாம் ஆழமாக ஆராயாமல் மேலெழுந்த வாரியாகக் கதைப்பதெல்லாம் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வதேயாகும்.

எனினும், தனி நபர் என்ற முறையில் இரண்டொரு தமிழர்களுக்கு வேறு தேசம் சென்று வசதியாக வாழ வாய்ப்பு இருக்கமுடியும். ஆனால் அதே தனி நபர் வாய்ப்பு, நமது தமிழ்ச் சமுதாயம் முழுவதற்கும் பொருந்தாது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு சமுதாயப் பிரச்னை. வேலை வாய்ப்புகள் குறைவாயிருக்கும் இவ்வேளையில் இன, மத, சாதிப்பாகுபாடுகளைப் பயன்படுத்தி, உள்ள உத்தியோகங்களைப் பெற்றுக்கொள்ளவே ஒவ்வொருவரும் முனைகிறார்கள். இந்த அடிப்படையால் உருவாகியதுதான் இன்று தமிழர்களிடையே அதிகமாகத் தென்படும் வேலையில்லாத் திண்டாட்டம். எனவே இதற்கு நிரந்தர பரிகாரம் காண ஒரே வழி, வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதே! ★

கலைச்சொல் ஆக்கத்தில் ஒருமைப்பாடு

(அறிவொளி II/IV ஆசிரியத் தலையங்கம்)

1967-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த கருத்தரங்கில் கலைச் சொல்லாக்கத்தில் ஒருமைப்பாடு காண்பது பற்றிப் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அவற்றில் சில பற்றி நாம் இங்கு சிந்திப்பது பொருத்தமாகும்.

தமிழில் கலைச்சொல் ஆக்கம் ஏற்கனவே எமது நாட்டில் பெருமளவு நடைபெற்றுள்ளது — இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றது. பெரும்பகுதி தமிழ்

மக்கள் வாழும் இந்தியத் துணைக் கண்டத்திலும் இப் பெரும்பணிக்கான ஆரம்ப முயற்சிகளேனும் எடுக்கப் பட்டுள்ளன. தமிழ் மக்கள் குறிப்பிடத்தக்க தொகையில் வாழும் மலேசியா போன்ற பிற தேசங்களிலும் இம்முயற் சிகள் தோன்றி வளர இடமுண்டு. இங்கிலையில் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையான கலைச்சொற்கள் ஆக்கப் படும் என்ருல் ஒரு நாட்டின் தொகுப்புகளும் நூல்களும் பிறநாட்டில் பயன்படுத்த இயலாத குழப்ப நிலையே உண்டாகும். முயற்சியும் பொருட்செலவும் இரட்டிக்கும்- விரயமாகும்.

அண்மைக் காலத்தில் சில நல்ல விஞ்ஞான நூல்கள் தமிழ் நாட்டில் வெளிவந்துள்ளன. அவற்றை எமது நாட்டு மாணவர்களும் பிறரும் பயன் படுத்த இயலாத நிலையில் இருக்கிருர்கள். அதற்கான முக்கிய காரணம் கலைச்சொற்களின் வேறுபாடே. இதே போல எமது நாட்டிலே அருமுயற்சி செய்துவெளியிடப்பட்டுள்ள பல நல்ல விஞ்ஞான நூல்களை இந்திய மாணவர்கள் பயன் படுத்த இயலாது தவிக்கிருர்கள். ஒரு நாட்டின் வெளியீடு ஒன்றை பிறநாட்டில் பயன்படுத்துவதற்கு மீண்டும் 'மொழி மாற்றம்' செய்யவேண்டிய நிலை வருந்தத்தக்கது. நாட்டுக்கு நாடு அல்லது பிரதேசத்துக்குப் பிரதேசம் மொழி நடை வேறுபடுவதைத் தவிர்க்க முடியாதிருக்கலாம். ஆனுல் விஞ்ஞான நூல்களைப் பெறுத்தவரையில் அவை கலை இலக்கியப் படைப்புகளைப் போலல்லாது மொழி நடை வேறுபட்டால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. இதனுல் கலைச் சொற்களை மட்டும் பொறுத்தவரையில் ஒருமைப்பாடு காண முடியும் என்ருல் அது முயற்சிகளைப் பேணும்; பொருட் செலவைக் குறைக்கும் பயனையும் பெருக்கும் என் பதில் ஐயமில்லை. இது விஷயமாக இரு கருத்துக்கள் நிலவ இடமில்லை.

கலைச்செல்லாக்கத்தில் ஒருமைப்பாடு ஏற்படுவது

சாத்தியம். அது கட்டாயம் ஏற்படவும் வேண்டும். ஆனால்...

அத்துடன் விஷயம் முடிந்து விட்டதாகக் கருதக் கூடாது. இதுவரை காலமும் ஏன் இந்த ஒருமைப்பாடு ஏற்படவில்லை? இனிமேல் ஏற்படுமா? இந்த ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் என்ன? இந்தச் சாதனையைச் செயற்படுத்த வேண்டியது யார் பொறுப்பு? என்பன பற்றியெல்லாம் நாம் சிந்தித்தல் அவசியம்.

கருத்தரங்கத்தில் மற்றுமொரு ஐயப்பாடு அல்லது அச்சம் தெரிவிக்கப்பட்டது. ஏற்கெனவே 8 ஆண்டு காலமாக படிப்படியாக தமிழ்மொழி மூலம் விஞ்ஞானக் கல்வி இலங்கைப் பாடசாலைகளில் பயிற்றப்பட்டு விட்டது. நடைமுறையில் வளர்ச்சியடைந்த கட்டத்தில் போய்க்கொண்டிருக்கும் நாம் கலைச்சொல்லாக்க ஒருமைப்பாடு பற்றி தமிழ்நாட்டுத் தாபனங்கள் சிலவற்றை அணுகினால் அவர்கள் சமத்துவ அடிப்படையில் பேச்சு வார்த்தைகளை நடாத்த உடன்படுவார்களா? அல்லது தாமே தமிழ்க் 'காவலர்கள்' என்றோ தமதே தமிழென்றோ இறுமாப்படைந்து 'பெரியண்ணன் நோக்கோடு' எமக்குப் 'புத்தி சொல்ல' வருவார்களா? என்ற ஐயப்பாடு எழுப்பப்பட்டது.

இறுதியாக, ஒரு சிறு எச்சரிக்கை. கலைச்சொற்களில் ஒருமைப்பாடு இல்லையே என்பதைச் சாட்டாகக் கொண்டு சிலர் மொழிபெயர்ப்பு வேலைகளையும் புது நூல்கள் இயற்றும் பணிகளையும் ஒத்தி வைக்குமாறு கேட்கக்கூடும். அதுவும் கூடிய ஆங்கிலம், கட்டாய ஆங்கிலம், சிறந்த ஆங்கிலம் என்ற கோஷங்கள் ஒரு சாரார் மத்தியிலிருந்து எழுந்து கொண்டிருப்பதால் போதனா மொழி மாற்றத்தைப் பிற்போடுவதற்குச் சிலர் சாட்டுகள் தேடித் திரியும் இந்தக் காலகட்டத்தில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். மொழி பெயர்ப்பு வேலைகளும் படைப்பு வேலைகளும் தொடர்ந்து நடைபெறட்டும். துரிதமாக! அவ்வேலைகள் நடந்து கொண்டிருக்கும் பொழுதே நாம் ஒருமைப்பாட்டைத் தேடிக்கொள்வோம்.

★

அறிவொளி

வீடுதோறும் கலையின் விளக்கம்

வீதிதோறும் இரண்டொரு பள்ளி

வேண்டுமென ஆசைப்பட்டார் மகாகவி பாரதியார். ஒவ்வொரு மனிதனுமே தத்தம் பிரச்னைகளை விஞ்ஞான நோக்கில் அணுக வேண்டும் என்று ஆசைப்படுகிறோம் நாம். மக்களிடையே அறிவியலை அவர்தம் தாய்மொழியிலேயே பரப்புதல் வேண்டும் என்பதையே முழுமுதல் அடிப்படையாகக் கொண்டு ஈழநாட்டில்

1. கலைச்சொல்லாக்கம்
2. விஞ்ஞானத்தை ஜனரஞ்சகப்படுத்தல்
3. விஞ்ஞானக்கல்வியில் ஆங்கிலத்துக்குரிய இடம்
4. பாடநூல்கள், துணை நூல்கள், பிரசுரம் பற்றிய பிரச்சினைகளை

கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை வானொலி கல்வி ஒலிபரப்பு, இலங்கை விஞ்ஞான விருத்திக் கழகம், ஆசிரியர் சங்கங்கள் போன்ற நிறுவகங்களைச் சேர்ந்தோர் திறம்பட எழுதுகிறார்கள்.

தொடர்புகள் :—

செயலாளர்,

அறிவொளி

35/9, யோசேப்பு ஒழுங்கை, பம்பலப்பிட்டி

இலங்கை.

தீபம் அச்சகம், சென்னை-2.